(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 36.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2015 திசெம்பர் 14, திங்கட்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

84/ '15

1.

கௌரவ புத்திக பத்திறண,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 2014.06.30 ஆம் திகதி தொடக்கம் 2015.06.30 ஆம் திகதி வரை நடைபெற்ற வாகன விபத்துக்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி வாகன விபத்துக்களின் மூலம் சம்பவித்த மரணங்களின் எண்ணிக்கை யாது;

(iii) இம்மரணங்கள் சம்பவித்த விபத்துக்களுக்கான மிக நெருங்கிய காரணம் ஒவ்வொரு விபத்தின்படி வெவ்வேறாக யாது;

(iv) இதன்படி அதிகப்படியான மரணங்கள் சம்பவித்ததற்கான காரணம் யாது, அதன் பெறுமானம் சதவீதமாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் வாகன விபத்துக்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா;

(ii) ஆமெனில், அதற்கான திட்டங்கள் யாவை;

(iii) இத்திட்டங்களில் செயற்படுத்தப்பட்ட மற்றும் செயற்படுத்தப்படாத திட்டங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

187/ '15

2.

கௌரவ டலஸ் அழகப்பெரும,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆம் திகதியன்று காலை அலரி மாளிகை வளாகத்தில் அரச விரோத சூழ்ச்சியொன்று இடம்பெற்றதாக தற்போதைய அரசாங்கத்தின் பொறுப்புவாய்ந்த அரசியல்வாதிகள் தெரிவித்திருந்தார்கள் என்பதையும்;

(ii) அவ்வாறானதொரு சூழ்ச்சி இடம்பெற்றதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் மற்றும் அரசாங்கத்தின் ஊடக பேச்சாளரான அமைச்சர், அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பின்போதும் பாராளுமன்ற சபா மண்டபத்திலும் தெரிவித்திருந்தார்கள் என்பதையும்;

(iii) மேற்படி சூழ்ச்சி தொடர்பாக கண்டறிவதற்கு இலங்கைப் பொலிசாரினால் விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டதென்பதையும்;

(iv) ஏற்புடைய விசாரணைகள் மூலம் கண்டறியப்பட்ட விடயங்களுக்கமைய முன்னாள் சனாதிபதி அல்லது முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சனவரி மாதம் 09 ஆம் திகதியன்று எவ்விதமான அரச விரோத சூழ்ச்சியையும் மேற்கொள்ளவில்லை என்பது உறுதிப்படுத்தப் பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி அ (iii) இல் குறிப்பிடப்பட்ட பொலிஸ் விசாரணையின் பெறுபேறு யாதென்பதையும்;

(ii) மேற்படி விசாரணைக்கமைய குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கு பொலிசாரினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) இன்றேல், ஏன் என்பதையும்;

(iv) மேற்படி விசாரணைக்கமைய, 2015 சனவரி 09 ஆம் திகதியன்று காலை அலரி மாளிகையில் எவ்விதமான அரச விரோத சூழ்ச்சியும் நடைபெறவில்லை என அறிவிப்பாரா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

191/ ' 15

3.

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 – 2014 வரை இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் வினால் கொள்வனவு செய்யப்பட்டுள்ள புதிய பஸ்வண்டிகளின் எண்ணிக்கை வருடாந்தம் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) பஸ்வண்டிகளை கொள்வனவு செய்வதற்காக வருடாந்தம் செலவிடப்பட்ட பணத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி புதிய பஸ்வண்டிகள் வழங்கப்பட்ட டிப்போக்கள் யாவையென்பதையும்;

(iv) லங்கா அசோக் லேலண்ட் கம்பனியிலிருந்து WP NB-6028, WP NC-6049, WP NB- 6051, WP NB-6057, WP NB-6067, WP NB-6671, WP NB-7750, WP NB-7751, WP NB-7752, WP NB-7967, WP NC-0653, WP NC-1307, WP NC-1746 மற்றும் WP NC-2016 ஆகிய இலக்கங்களுடைய 14 பஸ்வண்டிகளை கொள்வனவு செய்ய செலவிடப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி அ(iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள 14 பஸ்வண்டிகளும் தற்போது இ.போ.ச. வசம் உள்ளனவா என்பயையும்;

(ii) ஆமெனில், மேற்படி பஸ்வண்டிகள் உரித்தாயுள்ள டிப்போக்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

242/ '15

4.

கௌரவ பந்துல குணவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2000ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை,

(i) அரசாங்கத்தின் வெளிநாட்டுச் சொத்துக்கள்;

(ii) இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் சொத்துக்கள்;

(iii) வைப்புக்களை பெற்றுக்கொள்ளும் நிறுவனங்களின் வெளிநாட்டுச் சொத்துக்கள்;

(iv) ஒதுக்கங்களுக்கேற்புடைய பொறுப்புகள்;

(v) தேறிய வெளிநாட்டு ஒதுக்கம்;

ஒன்றுதிரண்ட விதம், ஒவ்வோர் ஆண்டுக்கமைய வெவ்வேறாக யாதென்பதை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) இலங்கையர்களால்/ அரசாங்கத்தினால் வெளிநாடுகளில் மேற்கொள்ளப் பட்டுள்ள நேரடி வெளிநாட்டு முதலீடுகள் யாவை என்பதையும்;

(ii) அவ்வாறான முதலீடுகள் அரசாங்கத்துக்கு சொந்தமான சொத்துக்களாக, மேலே குறிப்பிடப்பட்ட புள்ளிவிபரத் தரவுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், ஏன் என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) 2000 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை வெளிநாட்டு ஒதுக்கங்களில் தங்கத்தின் மீதி மாறுபட்டுள்ள விதத்தை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

245/ '15

5.

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) விளையாட்டுத்துறை அமைச்சினால் மாகாண மற்றும் மாவட்ட மட்டத்தில் 25 விளையாட்டரங்குகள் நிர்மாணித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி விளையாட்டரங்குகளில் ஏற்கனவே பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள மற்றும் திறந்து வைக்கப்பட்டுள்ள விளையாட்டரங்குகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(ii) இதுவரை வேலைகள் பூர்த்தி செய்யப்படாத விளையாட்டரங்குகளின் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

251/ ' 15

6.

கௌரவ பிமல் ரத்நாயக்க,— மகளிர், சிறுவர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010, 2011, 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் நெருங்கிய உறவினர்களின் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் பெண்கள் தரப்பில் பொலிஸிற்கும் இலங்கைப் பெண்கள் பணியகத்திற்கும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கும் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை, ஒவ்வொரு வருடத்தின் அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

85/ '15

6.

கௌரவ புத்திக பத்திறண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1 )

(அ) (i) கொழும்பு, லும்பிணி வித்தியாலயத்தின் லும்பிணி அரங்கு பழுதடைந்து உள்ளது என்பதையும்;

(ii) அதைத் திருத்தியமைப்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதையும்;

(iii) மேற்படி அரங்கு பழுதடைந்து காணப்படுவது குறித்த பாடசாலைக்கும் அதேபோன்று கலைத்துறைக்கும் பாரிய இழப்பாக அமைந்துள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) லும்பிணி அரங்கு திறந்து வைக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அன்று தொடக்கம் இன்று வரை அது எத்தனை தடவைகள் மறுசீரமைக்கப்பட்டது என்பதையும்;

(iii) மேற்படி அரங்கு இறுதியாக மறுசீரமைக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) லும்பிணி அரங்கினை மறுசீரமைக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கென செலவிடும் தொகை யாதென்பதையும்;

(iii) குறித்த மறுசீரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2016) — (ஒதுக்கப்பட்ட பத்தொன்பதாவது நாள்) — குழு ஆய்நிலை (பரிசீலனை, திசெம்பர் 12).

* 2.

நிதி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 26 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 மே மாதம் 18 ஆம் திகதிய 1915/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.11.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்திவரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்திவரி தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2015 ஒற்றோபர் மாதம் 2 ஆம் திகதிய 1934/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— காலத்துக்குக் காலம் திருத்திப்பட்ட மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 22 ஆவது பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் மதுவரி தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2015 ஒற்றோபர் மாதம் 2 ஆம் திகதிய 1934/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(975, 976 மற்றும் 977 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல்கள்)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

நிதி அமைச்சர்,— முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் முத்திரைத் தீர்வை தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2015 செத்தெம்பர் மாதம் 21 ஆம் திகதிய 1933/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

நிதி அமைச்சர்,— காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் 13(1) (ஈ) என்னும் பிரிவுடனும் 16 பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் 112 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 மார்ச்சு மாதம் 25 ஆம் திகதிய 1907/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

நிதி அமைச்சர்,— உண்ணாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— இரட்டை வரிவிதிப்பைத் தவிர்ப்பதற்கும் வருமானத்தின் மீது வரிகொடாது தட்டிக்கழிப்பதைத் தடுப்பதற்குமாக, 2014 ஏப்பிறல் 03 ஆம் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் சிங்கப்பூர் குடியரசின் அரசாங்கத்திற்கும் இடையே செய்து கொள்ளப்பட்டதும், 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 97(1)(அ) பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் கட்டார் நாட்டு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 2012 மே 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் தாய்லாந்து இராச்சிய அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 1996 ஜனவரி 03 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 3),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் இந்தோனேஷியக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 1996 ஜூன் 10 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 4),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் எகிப்து அராபியக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 1996 மாச்சு 11 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 12.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 5),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைத் நாட்டு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 2009 நவெம்பர் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 13.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 6),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் வியட்நாம் சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 2009 ஒற்றோபர் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 14.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 7),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் சீன மக்கள் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 1986 மாச்சு 13 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 15.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 8),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் மலேசியா அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 1982 ஏப்பிரல் 16 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 16.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 9),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 2000 ஜனவரி மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 17.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 10),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் ஈரான் இஸ்லாமியக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 2000 ஜூலை 25 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 18.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 11),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் செக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 2011 மாச்சு 28 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 19.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 12),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் இந்தியக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 1997 ஜனவரி 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 20.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 பெப்புருவரி 26 ஆம் திகதிய 1903/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 21.

நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்,— குற்றவியல் விடயங்களின் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க குற்றவியல் விடயங்களின் போது பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2015 ஓகத்து மாதம் 06 ஆம் திகதிய 1926/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 22.

நிதி அமைச்சர்,— முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான முத்திரைக் கட்டணம் தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2014 செத்தெம்பர் 30 ஆம் திகதிய, 1882/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 23.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 28(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 16(இ) ஆம் பிரிவின் கீழ் மதுவரி உரிமக் கட்டணம் தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு 2015 பெப்புருவரி மாதம் 13 ஆம் திகதிய 1901/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(973 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல்)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

## தினப்பணிகள் மீதான திருத்தங்கள் பற்றிய முன்னறிவித்தல்

அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2016) எனும் சட்டமூலத்திற்குக் குழு ஆய்நிலையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் திருத்தங்களைத் “தினப்பணிக்கான அனுபந்தம்” எனும் தனியிதழிற் பார்க்க.

---